DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | தர்மராஜ் (P.w.3) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of February 2026

<u>(4வது எதிரி ஆஜர் இல்லை. மேற்படி 4வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)</u>

**முதல் விசாரணை :–**

நான் தற்போது உளுத்திமடையில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநர் வேலை பார்த்து வருகிறேன். அசா1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி பாலமுருகனை தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை இருந்தது. கடந்த 29.12.2022ம் தேதியன்று நான் வீட்டில் இருந்தபோது நாகமலை, லட்சுமி, மணிகண்டன், பாலமுருகன், முனிஸ்வரன் ஆகியோர் தனியாக இருந்த எனது அம்மா வீட்டிற்கு வந்து மாலை 5.30மணியளவில் எதிரிகள் வந்து எனதுஅம்மாவை சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது எனது அம்மா

அலறல் சத்தம் கேட்டு நான் எனதுஅம்மா வீட்டிற்கு வந்தேன். அப்போது எனது மனைவி ஜெயா கீழே விழுந்துகிடந்தார். நான் வந்து தூக்கினேன். எனது அம்மாவை பார்த்தபோது எனது அம்மாவின் தலையில் ரத்தம் வந்தது. 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு எனது மனைவியும், எனது அம்மாவும் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு பார்க்கமுடியாது என்று கூறியதால் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனதுஅம்மா சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கிச் சென்றார்கள். கட்டனூர் போலிசார் எனது அம்மாவிடம் புகார் வாக்குமூலம் வாங்கிச் சென்றார்கள். எனது அம்மாவிடம் யார் அடித்தார்கள் என்று கேட்டபோது அவர் லட்சுமி, நாகமலை, மணிகண்டன் ஆகியோர் எனது அம்மாவின் தலைமுடியை பிடித்துஇழுத்து நாகமலை கம்பால் எனது அம்மாவின் வலது பக்க தலையில் அடித்ததாகவும், எனது மனைவியை விசாரித்தபோது பாலமுருகன், முனிஸ்வரன் ஆகியோர் தலைமுடியைப் பிடித்து இழுத்தும், எனது இரண்டு வயது மகனை கீழே தள்ளிவிட்டார்கள் என்றும் கூறினார்கள். அவர் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. மருத்துவமனையில் 6 நாட்கள் சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்தார்கள். அதன்பிறகு கட்டனூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தற்கு வழக்கு பதிவு செய்தார்களா என்றால் கேட்டேன் , அவர்கள் வழக்கு பதிவு செய்யவில்லை என்று சொன்னார்கள். அதன்பிறகு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் மனு செய்து வழக்கு பதிவு செய்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எ.த.கு.வி –

1. எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து வந்தேன் என்றால் சத்தம் கேட்டு 10 நிமிடத்தில் வந்துவிட்டேன். ஏற்கனவே இடம் சம்பந்தமாக எங்கள் இரு தரப்பினருக்கிடையில் நாகமலை என்பவர் எங்கள் மீது கட்டனூர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்து எத்தனை தடவை எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் எங்களை போலிசார் அழைத்து விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எங்களை போலிசார் அழைத்து விசாரித்தார்களா என்றால் 10 நாட்கள் கழித்து என்னிடம் வீட்டில் வைத்து போலிசார் விசாரித்தார்கள். எனது மனைவியை அடித்ததார்கள் என்று நான் எதுவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரில் எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எனது மனைவிக்கு வெளிக்காயங்கள் எதுவும் கிடையாது. எனது அம்மாவிற்கு வலது பக்கம் காயம் ஏற்பட்டது. சண்டையை எங்கள் தெருவில் எத்தனைநபர்கள் பார்த்தார்கள் என்றால் 4, 5 நபர்கள் பார்த்தார்கள். அவர்களை அழைத்து விசாரித்தால் எதிரிகள் எங்களை அடித்து காயப்படுத்திய விபரம் தெரியவரும் என்றால் சரிதான். சண்டை நடந்தவுடன் எவ்வளவு நேரத்தில் காவல் நிலையம் சென்றோம் என்றால் செல்லவில்லை.

2. நரிக்குடி வழியாகதான் திருச்சுழி அரசு மருத்துவமனை செல்லமுடியும் என்றால் சரிதான். நரிக்குடி அரசு மருத்துவமனையில் எனது மனைவிக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்தோமா என்றால் இல்லை. போலிசார் சொல்லிக் கொடுத்ததின்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள்

கழித்து காவல் நிலையம் சென்றேன் என்றால் நான் காவல் நிலையத்தில் இருந்து சம்மன் வரும் வரை போலிசார் எங்களை விசாரிக்கவில்லை.3, 4 எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். சண்டையானது எங்கள் வீட்டிற்கும் எதிரிகள் வீட்டிற்கும் இடையே உள்ள சந்தின் உள்ளேதான் நடந்தது என்றால் சரிதான். சந்தில் என் வீட்டிற்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் சண்டை நடந்தது என்றால் சரிதான். சண்டை நடந்தவுடன் எனது அம்மாவையும், மனைவியையும் யார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் நான்தான் அழைத்துச் சென்றேன். நாங்கள் 3பேரும் ஆம்புலன்சில் சென்றோம். எனது அம்மாவும், மனைவியும் சுயநினைவுடன் இருந்தார்களா என்றால் எனது அம்மா சுயநினைவுடன் இல்லை, எனது மனைவியால் பேசமுடியாமல் இருந்தார்.

3. எத்தனை நாட்கள் கழித்து எனது அம்மா பேசினார் என்றால் 3 நாட்கள் கழித்து பேசினார். சம்பவத்தை பற்றி 3 நாட்கள் கழித்துதான் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் கழித்து போலிசார் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் 3 நாட்கள் கழித்து வந்தார்கள், போலிசார் வரும் போது நான் மருத்துவமனையில் இல்லை. போலிசாரிடம் எனது அம்மா புகார் கொடுத்தார். அந்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் அருகில் உள்ள ஒரு நபரை அழைத்து எழுதச் சொல்லி உள்ளார்.

4. எதிரிகள் எனது அம்மாவையோ, மனைவியையோ அசிங்கமாக பேசவோ, அடிக்கவோ, காயப்படுத்தவோ இல்லை என்றாலும் எனது அம்மாதான் சர்வே கல்லை புடுங்கி ஆக்கிரமிப்பு செய்தேன் என்றாலும் அதை எதிரிகள் கேட்டதற்கு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நாள், நேரத்தில் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனது

அம்மா கட்டனூர் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நாங்கள் கொடுத்தபுகாரை எடுக்காமல் இருந்ததினால் நாங்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அம்மா கொடுத்த புகாருக்கு ஆதரவாக நானும் எனது மனைவியும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக நடந்திருந்தால் அன்றே கட்டனூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயா (P.w.2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of February 2026

(4வது எதிரி ஆஜர் இல்லை. மேற்படி 4வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது உளுத்திமடையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். அசா1 எனது அத்தை ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி பாலமுருகனை தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை இருந்தது. கடந்த 29.12.2022ம் தேதியன்று மாலை 5மணியளவில் நான், எனது அத்தையும் வீட்டிற்குள் இருந்தபோது நாகமலை, லட்சுமி, மணிகண்டன், பாலமுருகன், முனிஸ்வரன் ஆகியோர் எனது வீட்டின் முன்பு நின்று தேவுடியா,அவுசாரி என்று அசிங்கமாக பேசினார்கள். சத்தம் கேட்டு எனது அத்தை முதலில்

வந்தார். எனது அத்தையை லட்சுமியும், நாகமலையும், முடியைப் பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார்கள். நாகமலை கம்பை வைத்து எனது அத்தையின் உச்சந்தலையில் அடித்தார். எனது அத்தையை அடிக்கும் சத்தம் கேட்டு நான் வீட்டை விட்டு வெளியே வந்து சண்டையை விலக்கிவிட்டபோது என்னையும் பாலமுருகன், முனிஸ்வரன் ஆகிய இருவரும் தேவுடியா, அவுசாரி என்று அசிங்கமாக பேசி தலை முடியைப் பிடித்து என்னை உடல் முழுவதும் கையால் அடித்தார்கள். பாலமுருகன் , முனிஸ்வரன் ஆகிய இருவரும் எங்கள் இருவரைப் பார்த்து இவர்களை அடித்துக் கொள்ளுங்கள் இவர்களால்தான் பிரச்சனை வருகிறது என்று சொன்னார்கள். அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு நானும் எனது அத்தையும் சிகிச்சைக்கு வந்தோம். அங்கு பார்க்கமுடியாது என்று கூறியதால் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

1. எனது வீட்டிற்கு அருகில் எதிரிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே சர்வேக்கு படி கட்டி அளந்த கல் ஊண்டினார்கள் என்றால் சரிதான். அந்த கல்லைத்தாண்டி எனது அத்தை புழுங்கியதால்தான் பிரச்சனை என்றால் இல்லை. அதன்பிறகுதான் நாங்கள் புதிதாக வீடு கட்ட ஆரம்பித்தோம் என்றால் சரிதான். எங்களது செப்டிக் டேங் எங்கள் இடத்திற்குள் வைத்துக்கொள்ள எதிரி நாகமலை எனதுஅத்தையிடம் சொன்ன விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் சொல்லவில்லை. எனது அத்தை அடிக்கடி அளவுக்கல்லை பிடுங்கியது சம்பந்தமாக கட்டனூர் காவல் நிலையத்தில் எதிரிகள் புகார் அளித்தார்கள்

என்றால் இல்லை. சண்டைக்கு முன்பு எத்தனை தடவை காவல் நிலையம் சென்றிருப்போம் என்றால் 2 முறை சென்றோம். அந்த 2முறையும் இந்த இடம் தொடர்பாக பிரச்சனை என்றால் சரிதான். இடப் பிரச்சனை தவிர வேறு எந்த பிரச்சனையும் எங்களுக்குள் இல்லை என்றால் சரிதான். திருச்சுழி அரசு மருத்துவமனை வரவேண்டும் என்றால் நரிக்குடி வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான்.

2. சண்டையானது எவ்வளவு நேரம் நடைபெற்றது என்றால் 1மணி நேரம் நடைபெற்றது. சண்டை நடந்து முடிந்ததும் காவல் நிலையம் சென்றோமா என்றால் எங்கள் வீட்டில் இருந்து காவல் நிலையம் செல்லவில்லை. திருச்சுழி மருத்துவமனையில் இருக்கும்போது எந்த போலிசார் வந்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை, அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள், அதனால் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். சம்பவம் நடைபெற்று 2நாட்கள் கழித்து போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் ஆமாம். நானும் சிகிச்சையில் சேர்ந்தேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு போலிசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

3. எனது அத்தைக்கு ஏற்பட்ட காயத்திற்கு போலிசாரிடம் தனியாக புகார் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. நான் கொடுத்த புகாரினை யார் எழுதினார்கள் என்றால் கம்ப்யூட்டர் சென்டரில் நான் சொல்ல சொல்ல ஒரு நபர் எழுதினார். கம்ப்யூட்டர் சென்டருக்கு யார் சென்றார்கள் என்றால் எனது கணவர் சென்றார். எனது அத்தை கொடுத்த புகாரினை யார் எழுதினார்கள் என்றால் கம்ப்யூட்டர் சென்டரில்தான் அவர் சொல்ல சொல்ல ஒரு நபர் எழுதினார். யார் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனது அத்தை

கொடுத்த புகாருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சொன்னேன். சண்டை நடந்து எவ்வளவு நேரம் கழித்து நான் வெளியே வந்தேன் என்றால் 10 நிமிடம் கழித்து வந்தேன். நான் வருவதற்குள் எனது அத்தை காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். யார் அடித்து காயப்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நாகமலை அடித்து காயப்படுத்தினார். நான் வீட்டிற்குள் இருந்தபோது எனது அத்தைக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லி உள்ள நிலையில் யார் அடித்து காயம் ஏற்பட்டது என்று எனது அத்தை சொன்னாரா என்றால் நாகமலை அடித்ததாக சொன்னார். ( சாட்சி தற்போது வெளியே குழந்தையுடன் வந்தபோது எதிரிகள் அடித்துக் கொண்டிருந்ததாகவும் தன்னையும் அடித்ததாகவும் கூறுகிறார்).

4. வெளியே வரும்போது அத்தையை அடித்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லி உள்ளேன். எனது அத்தை கொடுத்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. புகாரில் உள்ள விபரம் எவ்வாறு தெரியும் என்றால் எனதுமகள் வீட்டில் வைத்து படித்துக் காண்பித்தார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை 15 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் விருதுநகர் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

5. எதிரிகள் எனது அத்தையை அசிங்கமாக பேசவோ, அடிக்கவோ, காயப்படுத்தவோ இல்லை என்றாலும் எனது அத்தைதான் சர்வே கல்லை புடுங்கி ஆக்கிரமிப்பு செய்தேன் என்றாலும் அதை எதிரிகள் கேட்டதற்கு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான்

சொன்ன மாதிரி சொன்ன நாள், நேரத்தில் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனது அத்தை கட்டனூர் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக நடந்திருந்தால் அன்றே கட்டனூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | லட்சுமி (P.w.1) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of February 2026

(4வது எதிரி ஆஜர் இல்லை. மேற்படி 4வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :–**

நான் தற்போது உளுத்திமடையில் குடியிருந்து வருகிறேன். நான் விறகு வெட்டும் தொழில் பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி பாலமுருகனை தெரியும். எனக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. நாகமலை என்பவர் சர்வேயருக்கு படிகட்டி எங்களுடைய இடத்தை அளந்து கல்ஊண்டினார்கள். ஆனால் அவர்கள் கல் ஊண்டியது எங்களது இடத்தில் ஊண்டினார்கள். கடந்த 4 வருடத்திற்கு முன்பு வீட்டிற்குள் நானும் எனது கணவர் மற்றும் மருமகள் ஜெயா ஆகியோர் இருந்தபோது மாலை 5மணியளவில் நாகமலை என்பவர்

எனது வீட்டிற்கு முன்பு வந்து இங்கே புழங்கக்கூடாது என்று சொல்லி நொத்தலக்க, நொம்மலக்க என்று அசிங்கமாக பேசி வீட்டை இடிடீ என்று கூறினார். அப்போது நானும், எனது மருமகளும் வீட்டை விட்டு வெளியே வந்தோம். எதிரிகளிடம் ஏன் இவ்வாறு பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டபோது லட்சுமி என்பவர் அவுசாரி,தேவுடியா உங்களை அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார். லட்சுமி என்பவர் எனது தலைமுடியை பிடித்தார். அப்போது நாகமலை கம்பை எடுத்து வந்து எனது தலையின் உச்சந்தலையில் அடித்தார். நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். அப்போது எனது மகன் தர்மராஜ் என்பவர் என்னை திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வந்தார்கள். அங்கு மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மருத்துவமனையில் வெளியில் இருந்த ஒரு நபரிடம் புகார் எழுதச் சொல்லி விசாரிக்க வந்த போலிசாரிடம் புகார் கொடுத்தேன். அதன்பிறகு நான் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு 15 நாட்கள் கழித்து விருதுநகரில் உள்ள மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் மனு அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

1.எங்களுக்கும் எதிரிகளுக்கும் தலா 5 செண்ட் இடமானது இலவசமாக அரசால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதுபோல் எத்தனை நபர்களுக்கு வீடு கொடுத்துள்ளார்கள் என்றால் 33 நபர்களுக்கு

கொடுத்துள்ளார்கள். அரசில் இருந்து எங்கள் அனைவருக்கும் வீடு கட்டி கொடுத்துள்ளார்கள். நாங்கள் காலிமனையில் வீடு கட்டச்சென்றோமா என்றால் ஆமாம். எனது வீட்டிற்கு வடக்கேதான் எதிரி நாகமலையின் வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரி நாகமலையின் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே உள்ள சந்தில்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இடப் பிரச்சனை சம்பந்தமாக நாங்கள் எதிரிகள் மீதும், எதிரிகள் எங்கள் மீதும் காவல் நிலையத்தில் அசிங்கமாக பேசியது சம்பந்தமாக புகார் மனு கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த எந்த புகாருக்கும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

2. அளந்து சர்வேக்கு படி கட்டி எதிரிகள் தான் கல் ஊண்டினார்கள் என்றால் சரிதான். அந்த அளவை கல்லைத் தாண்டி நாங்கள் வந்ததால்தான் பிரச்சனை என்றால் சரிதான். சண்டை நடக்கும்போது எனது கணவர், மருமகள் ஆகியோர் வீட்டிற்குள் இருந்தார்களா என்றால் ஆமாம், சத்தம் கேட்டு எனது மருமகள் வெளியே வந்தார். சம்பவ தேதியில் நான் எதிரிகளை அடித்ததாக என் மீது கட்டனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. சண்டையானது மாலை 5மணிக்கு ஆரம்பித்து இரவு 11மணி வரை நடைபெற்றது என்றால் சரிதான். எத்தனைமணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் காவல் நிலையம் செல்லவில்லை, மருத்துவமனைக்குதான் சென்றோம். எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில்தான் இருந்தார்.

3. எனது மகன் காவல் நிலையம் சென்றாரா என்றால் செல்லவில்லை, என்னை அருப்புக்கோட்டை மருத்துவமனைக்குதான் அழைத்துச் சென்றார்கள். திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வரும்போது 2 மணி இருக்குமா என்றால் 2மணி இருக்கும். அங்கு பார்க்க முடியாது

என்பதால் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். ஊரில் இருந்து 108 ஆம்புலன்சில்தான் சென்றோம். என்னுடன் எனது மருமகள் மருத்துவமனைக்கு வந்தார். மருத்துவமனைக்கு வரும்போது எனக்கு சுயநினைவு இல்லை என்றால் சரிதான்.

4. திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றால் நரிக்குடி வழியாகதான் வரவேண்டும் என்றால் சரிதான். நரிக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். சண்டை நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் வந்தார்கள் என்றால் 10 நாட்கள் கழித்து வந்தார்கள். போலிசாரிடம் எத்தனை நபர்கள் மீது புகார் கொடுத்தேன் என்றால் 5 நபர்கள் மீது புகார் கொடுத்தேன். மருத்துவமனையில் இருந்தபோது யாரிடம் புகார் எழுதி வாங்கினேன் என்றால் பெயர் தெரியவில்லை. வழக்கறிஞரா என்றால் ஆமாம். எனது மகன் தான் எழுதி வாங்கினார்.

5. புகார் மனுவில் என்ன எழுதி உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த புகார் மனுவைதான் அருப்புக்கோட்டையில் ஒரு வழக்கறிஞரிடம் எழுதி வாங்கினார் என்றால் சரிதான். எனது மகன் பெயர் தர்மராஜ் ஆகும். அதன்பேரில் தான் போலிசார் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு புகார் கொடுக்க வேறு எங்கேயும் சென்றேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சி தர்மராஜ் எனது மகன் என்றால் சரிதான். கவுதமி எனது மருமகள் என்றால் சரிதான். ராக்கு எனது தங்கை ஆவார். மேற்படி நபர்கள் சண்டையின்போது இல்லை என்றால் சரிதான், மருத்துவமனைக்கு வந்தார்கள். மருத்துவமனையில் இருந்து வந்தபிறகு வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள்

என்னை அசிங்கமாக பேசவோ, அடிக்கவோ, காயப்படுத்தவோ இல்லை என்றாலும் நான்தான் சர்வே கல்லை புடுங்கி ஆக்கிரமிப்பு செய்தேன் என்றாலும் அதை எதிரிகள் கேட்டதற்கு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நாள், நேரத்தில் எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் கட்டனூர் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.